# **In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 96/2016** **Date:06.06.2025**
**(P.W.1)- ஃபரூக்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் பழைய பள்ளிக்காக ஆர்பர் சாலையில் வாங்கிய சொத்து புதிய பள்ளியின் கணக்கில் சேர்த்துக் கொள்ளாததால் வேறு சொத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் காமராசர் சாலையில் முதன்முதலில் எப்போது சொத்து வாங்கினேன் என்றால் 2005-ஆம் ஆண்டில் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் 30.03.2005 தேதியிட்ட குளச்சல் சார்பதிவாளர் ஆவண எண்-477/2005-ன்படி 24 சென்ட் சொத்தை நான் மற்றும் மூன்று நபர்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி 24 சென்டில்தான் முதலில் பள்ளி கட்டப்பட்டது என்றால் சரியல்ல. 24 சென்ட் உட்பட பள்ளி கட்டடப்பட்டது என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார். நான் மேற்படி ஆவணம் படி 24 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கிய பின் பிராதில் (8-ஆம் பத்தி) கூறியுள்ளபடி 52 சென்ட் சொத்தை அனிபா குடும்பம் எனக்கு வழங்கியதாக கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

2. மேற்படி 24 சென்ட் சொத்தை என்னிடம் காட்டப்படும் ஆவணமான 14.07.2005-ஆம் தேதியிட்ட குளச்சல் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1139/2005 -ன்படி தமிழ்நாடு மெர்க்கைண்டல் வங்கிக்கு குத்தகைக்கு கொடுத்தோம் என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது). வா.சா.ஆ.5-ஆவணத்தில் இஸ்லாமிக் சர்வீஸ் சொசைட்டிக்காக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வாதுரையில்(பத்தி-4) சொல்லியுள்ள Joint Account நானும் எம்.ஏ. பசீர் என்பவரும் சேர்ந்து தொடங்கியது என்றால் சரியல்ல. மேற்படி Joint Account சம்மந்தமாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி Joint Account நான் மற்றும் சங்க உறுப்பினர்களால் சேர்ந்து வங்கியில் தொடங்கப்பட்டது என்றால் சரிதான். புதிதாக காமராசர் சாலையில் கட்டப்பட்ட பள்ளிக்கு என் தனிப்பட்ட பணத்தை முதலீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பள்ளி கட்டுவதற்கு நான் என்னுடைய பணத்தை முதலீடு செய்வதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(P.W.1)- கூபரூக்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் பத்தி-11-ல் கூறியுள்ளபடி பதிவு எண் 50/1986 கொண்ட சங்கத்தை மீட்டு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறியுள்ளேன், அது சம்மந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய இயலவில்லை. நான் பள்ளியின் தாளாலராக இருந்தபோது பள்ளியில் பணத்தை கையாடல் செய்த காரணத்தினால் 15.01.2012 அன்று சங்க உறுப்பினர்கள் ஆடிட் செய்வதற்காக கணக்கை கேட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பலமுறை என்னிடம் கேட்டும்கணக்கு புத்தகத்தை நான் ஒப்படைக்காத காரணத்தினால் 22.01.2012 அன்று சங்கப் பொதுக்குழு கூடி நான் பள்ளி தாளாலர் மற்றும் சங்கப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் நீக்கப்பட்ட பிறகு வழக்கின் வாதி தாளாலர் ஆகவும் 2-ஆம் பிரதிவாதி தலைவராகவும், 6-ஆம் பிரதிவாதி பொருளாலர் ஆகவும் நியமிக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நியமன உத்தரவு எனக்கு அனுப்பட்டது என்றால் சரியல்ல.

4. மேற்படி நியமனத்தால் ஏற்பட்ட தாழ்ப்புணர்ச்சி காரணமாக 27.01.2012 அன்று பழைய பள்ளிக்கூடம் சம்மந்தப்பட்ட இடங்களை குளச்சல் தொழுகை ஜூம்மா பள்ளி, வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பிறகு மேற்படி பள்ளிக்கே தானமாக கொடுத்துவிட்டேன் என்று அறிவித்தேன் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி பள்ளிக்கு சம்மந்தப்பட்ட இடங்களை தானமாக கொடுக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த தானத்தை மேற்படி ஜூம்மா பள்ளி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் தற்போது உள்ள பள்ளி அலுவலகர்கள் மேற்படி பள்ளியை விற்க முயற்சிக்கிறார்கள் என்று நான் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 28.01.2012 அன்று பள்ளிக்கூடத்தின் புதிய நிர்வாகிகள், சங்க நிர்வாகிகள் மீது குளச்சல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்தேன் என்றாலும் மேற்படி புகார் போலீஸ் விசாரணைக்கு பின் பொய் புகார் என்று முடித்துவைத்து நான் மேலும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்ற அறிவுரை கூறி அனுப்பிவைத்தார்கள் என்றால் சரியல்ல.

**(P.W.1)- ஃபரூக்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் சங்க நிர்வாகிகள் மீதும் பள்ளி தாளாலர் மீதும் குளச்சல் காவல் நிலையத்தில் கொடுத்த குற்ற எண் 181/2012 பதிவு செய்யப்பட்டு முடித்துவைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காட்டப்படும் ஆவணம் STC.No.1018/2019-வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னை சங்கத்திலிருந்து நீக்கிய பின்புதான் நான் அசல் வழக்கு எண் 33/2012 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சங்கத்திலிருந்து நீக்கப்பட்ட பிறகு என் சங்கம் மீண்டும் பதிவு எண் 40/2013 என்று பதிவு செய்யப்பட்டது என்றால் அது மோசடியாக பதிவு செய்யப்பட்டது. அது உண்மையாகத்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சங்கத்திற்கும் இஸ்லாமிக் சர்வீஸ் சொசைட்டி கன்னியாகுமரி மாவட்டம் (ISSK) என்றுதான் பெயர் என்றால் சரியல்ல. மேற்படி ISSK பதிவு எண் 40/2013 எண் கொண்ட சங்கம் பழைய சங்கத்தை இணைத்து செயல்படுவதாக தீர்மானித்து மேற்படி தீர்மானமும் மாவட்ட சங்கப் பதிவாளலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் ஆவணம் ISSK பதிவு எண் 40/2013 சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி மாவட்ட சங்கப் பதிவாளரால் அனுப்பப்பட்ட உத்தரவின் நகல் என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஓரியண்ட் மெட்ரிகுலேஷன் பள்ளியின் மைனாரிட்டி உரிமையை ரத்து செய்ததற்கான நான் கொடுத்த மனுவின் மீதான உத்தரவு நகல் என்றால் சரிதான் (மேற்படி ஆவணம் பி.வா.சா-ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் பள்ளியின் தாளாலராக இருந்த காரணத்தினால்தான் மேற்படி பள்ளியின் தீர்வை ரசீது, மின் கட்டண ரசீது என் பெயரில் வந்தது என்றால் பாதி சரியல்ல, மேற்படி ரசீதுகளை வைத்து நான் பள்ளியின் மீது உரிமைகோரமுடியாது என்றால் சரியல்ல.

**(P.W.1)- ஃபரூக்**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

7. பிராதின் உறுதிமொழியில் முன்னரே கலைக்கப்பட்ட சங்கத்தின் பொதுச் செயலாளர் என தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தளாலராக இல்லாத பள்ளிக்கு நான் தாளாலர் என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. பள்ளிக்கூடம் சம்மந்தமான அனைத்து அசல் ஆவணங்களும் என்னிடம் உள்ளது என்றால் என்னிடமும் உள்ளது, பள்ளியிலும் உள்ளது. நான் அனைத்து ஆவணங்களையும் எடுத்துவிட்டேன் என்றாலும் பள்ளிக்கூடத்தில் எந்த ஆவணமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் பள்ளிக்கூடத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டேன் என்றாலும் பள்ளியின் முன்னேற்றத்திற்கு தற்போதுவரை இடையூறாக இருந்துவருகிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றாலும் பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்